**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.26/2023 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

பெயர் ஜெயஸ்ரீ

த/பெ. சங்கர்

வயது 22

வசிப்பிடம் எண்.37, ராஜாஜி தெரு, செங்கல்பட்டு

தொழில்

**முதல் விசாரணை 18.03.2026**

நான் இந்த வழக்கில் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 17.04.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. 03.12.2021 தேதியிட்ட எதிர்மனுதாரர் வாகன காப்பீடு சான்றிதழ் ம.சா.ஆ.2. எதிர்மனுதாரர் வாகன பதிவு சான்றிதழ் ம.சா.ஆ.3. எனது ஆதார் அட்டை ம.சா.ஆ.4. 17.04.2022 தேதியிட்ட செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ சான்று ம.சா.ஆ.5. 17.04.2022 தேதியிட்ட விபத்து பதிவு சான்று ம.சா.ஆ.6. 17.04.2022 தேதியிட்ட முகத்திற்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் அறிக்கை ம.சா.ஆ.7. 17.04.2022 தேதியிட்ட முதுகுக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் அறிக்கை ம.சா.ஆ.8. 17.04.2022 தேதியிட்ட தலைக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் அறிக்கை ம.சா.ஆ.9. முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.10. இறுதி அறிக்கை ம.சா.ஆ.11.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்து 17.04.2022 அன்று நடந்தது. விபத்தின் போது இரவு 12.15 மணிக்கு இருசக்கர வாகனத்தில் மாமண்டூர் புறவழிசாலை வழியாக செங்கல்பட்டு வந்த போது பச்சையம்மன் கோவில் அருகே விபத்து நடந்தது. அந்த வாகனத்தில் நான், சத்யா, சந்தோஷ்

ஆகிய மூவரும் வந்தோம். நாங்கள் மூவரும் இருசக்கர வாகனத்தில் வந்தபோது பின்னால் வந்த லாரி எங்கள் மீது மோதிவிட்டது. அதனால் நாங்கள் தடுமாறி கீழே விழுந்து விட்டோம். என் சித்தி மீது லாரி ஏறி அவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். எனக்கு தலை, கை மற்றும் இடது தோள்பட்டை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. நான் அன்றைய தினம் மாலையிலேயே மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டேன். சந்தோஷிற்கு அடிப்பட்டது. அவர் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவர் வாரியத்தின் முன்பு ஆஜரானேன். எத்தனை சதவீதம் ஊன சான்றிதழ் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரித்தார்கள். செங்கல்பட்டு நீதித்துறை நடுவர் எண்.2-ல் சாட்சியம் அளித்தேன். அந்த வழக்கு என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தெரியாது. சம்பவத்தன்று 3 நபர்கள் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்ததால் காப்பீட்டு விதிமுறைகளை மீறியுள்ளோம் என்றும், மோட்டார் வாகன சட்ட பிரிவுகளையும் மீறியுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. இரவு நேரத்தில் இருசக்கர வாகனத்தை அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று சாலையில் கீழே விழுந்து என் சித்தி விபத்தினை வரவழைத்து கொண்டார் என்றும், இந்த விபத்திற்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. காப்பீட்டு விதிமுறைகளை மீறியிருப்பதால 2ம எதிர்மனுதாரா இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும், எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் மருத்துவ சிகிச்சை பெற்றேன் என்பதை காட்ட மருத்துவமனை பில்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை